# குழந்தைகள் நன்றாக இருப்பதற்கு பெற்றோர்கள் முன்னுதாரணமாக இருக்க வேண்டும்: பள்ளி விழாவில் அறிவுரை

ஊட்டி, ஏப்.28-

குழந்தைகள் நன்றாக இருப்பதற்கு பெற்றோர்கள் முன்னுதாரணமாக இருக்க வேண்டும் என பள்ளி விழாவில் அறிவுரை வழங்கப்பட்டது.

ஊட்டி அருகேயுள்ள தூனேரி அகலாரில் இயற்கை எழில் சூழ்ந்த பகுதியில் சிறப்பாக செயல்பட்டு வரும் குருகுலம் பள்ளியில் 17 ஆம் ஆண்டு விழா கோலாகலமாக நடைபெற்றது.



இவ்விழாவில் சிறப்பு விருந்தினர்களாக நீலகிரி மாவட்டத்தில் இசையால் பல உயிர்களை வசம் செய்து கொண்டிருக்கும் தத்வான சைதன்ய சுவாமிகளும், சிறந்த சமூக சிந்தனையாளர் வழக்கறிஞர் போஜராஜன் மற்றும் நீலகிரி மாவட்டத்தின் ஸ்ரீP சத்யசாய் மாருதி சேவா அறக்கட்டளையின் மேலாண் பொறுப்பாட்சியர் சுவாமி ஸ்ரீP மேக்நாத் சாய் ஆகியோர் கலந்து கொண்டனர்.; .தத்வான சைதன்ய சுவாமியின் ஆன்மீக இன்னிசை பாடலுடன் தொடங்கிய நிகழ்ச்சிக்கு

பத்தாம் வகுப்பு மாணவி சமிக்ஷா வரவேற்று பேசினார். விழாவில் பள்ளி தாளாளர் வழக்கறிஞர் அர்ஜுணன் சிறப்பு விருந்தினர்களை கௌரவித்தார் ஆசிரியர் சத்யா சிறப்பு விருந்தினர்களை பற்றி அறிமுக உரை வழங்கினார் பள்ளி முதல்வர் சுரேஷ் பாபு ஆண்டறிக்கை வாசித்தார். நிகழ்ச்சியில் எல்கேஜி முதல் பத்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. மேலும் கடந்த ஆண்டில்பொதுத்தேர்வில் முதல் மூன்று இடத்தை பிடித்த மாணவ மாணவிகளுக்கு சிறப்பு பரிசுகள் வழங்கப்பட்டன. மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளில் செல்போன் வருவதற்கு முன் இருந்த வாழ்க்கை முறையும் செல்போன் வந்த பிறகு இருக்கும் வாழ்க்கை முறை பற்றியும் இடம் பெற்றது. மேலும் படுகர் இன கலாச்சாரமும் ஆடம்பரமாக இல்லாமல் எளிமையாக இருந்த திருமண நிகழ்வுகளையும் மாணவர்கள் நடத்தினர். மற்ற பல நிகழ்ச்சிகளும் மெய்சிலிர்க்கும் வகையில் இருந்தன.விழாவில் தாளாளர் அர்ஜுனன் பேசுகையில் இதுவரையிலும் நம்மில் அடிமை மனப்பான்மை உள்ள மக்களில் சிலர் ஆங்கிலேயர்கள் வந்த பிறகுதான் பாரதத்தில் கல்வி வளர்ச்சி பெற்றது என்று கூறிக் கொண் டி ருக் கி றார் கள். கல்வி மட்டும் அல்ல பண்பாட்டிலும் நாகரிகத்திலும் ஆங்கிலேயர்கள் வந்த பிறகு தான் நாம் மேன்மை அடைந்தோம் என்று கூறிக் கொண்டிருக்கிறார்கள் அவ்வப்போது இந்த கருத்து அவர்கள் மூலம் வெளிப்படும் சில நேரங்களில் அது மிகுதியாக வெளிப்படும். அதன் உண்மை என்ன? ஆங்கிலேயர்களில் மெக்காலே 1835 ஆம் ஆண்டு இந்தியாவிற்கு விஜயம் செய்தார். அவரை ஆங்கில அரசு அனுப்பியதே, இந்தியாவை பற்றி ஒரு ஆராய்ச்சி செய்து அவர்களின் ஆட்சியின் கீழ் இந்தியாவை கொண்டு வர வேண்டும் ,அடக்கி ஆள வேண்டும் கால ணி ஆதிக்கம் செய்ய வேண்டும் என்பதற்காகத்தான். இந்த வகையில் அவர் வந்த பிறகு பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் பிப்ரவரி மாதம் இரண்டாம் தேதி 1935 ஆம் ஆண்டில் அவர் ஆற்றிய உரையில், நான் இந்தியாவை மேலிருந்து கீழாகவும் குறுக்கு வெட்டாகவும் அனைத்து இடங்களிலும் பயணம் செய்திருக்கிறேன். இந்தியாவில் ஒரு பிச்சைக்காரனையும், திருடனையும் நான்பார்த்ததில்லை. எல்லோரும் மிகவும் மரியாதையாகவும் நேர்மையாகவும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நல்ல செல்வ மிகுதியுடன் இருக்கிறார்கள் .அதற்கு காரணம் அவர்களின் பண்பாடும் கலாச்சாரமும் தான்.அது நீடித்திருக்கும் வரையில் நம்மால் இந்தியாவை அடிமைப்படுத்தி ஆள முடியாது. நாம் இந்தியர்கள் மனதில் அவர்களின் கலாச்சாரத்தின் மீதும் பண்பாட்டின் மீதும் ஒரு தாழ்வு மனப்பான்மை உருவாக்க வேண்டும். ஆங்கிலம் பேசுவதின் மூலம்தான் ஆங்கிலேயர்கள் எடுத்து வைப்பது தான் சிறந்தது என்ற மனப்பான்மை கொண்டு வந்தாலன்றி இவர்களின் கலாச்சாத்தை சீரழிக்க முடியாது சிதைக்கவும் முடியாது என்று பேசியுள்ளார்.ஆனால் இன்றைய நிலை என்ன? வெள்ளைக்காரர்கள் வந்து இந்தியாவை கல்வியாலோ கலாச்சாரத்தினாலோ பண்பாட்டினாலோ மேம்படுத்தவில்லை. இந்தியாவை சிதைத்து விட்டார்கள். சிறப்பு விருந்தினர் போஜராஜன் பேசுகையில், அர்ஜுனன் பேசுகையில் மெக்காலே அவர்கள் பற்றி எடுத்துரைத்தார். எல்லோரும் பேசும்போது 'நீலகிரியில் பிச்சை எடுப்போர் இல்லை, திருடர்கள் இல்லை' என்று சொல்வார்கள் .நீலகிரி என்றாலே அழகு அதை நான் காப்பாற்ற வேண்டும் நீலகிரியிலேயே அழகான இந்த பள்ளியை அர்ஜுனன் தந்திருக்கிறார்கள் .அதை இந்த பகுதியில் உள்ள மக்கள் நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும். பெற்றோர்கள் இப்படிப்பட்ட சிறந்த பள்ளியில் தங்கள் குழந்தைகளை படிக்க வைக்க வேண்டும். குழந்தைகள் நன்றாக இருக்க வேண்டும் என்றால் அதற்கு பெற்றோர்கள் முன்னுதாரணமாக இருக்க வேண்டும் என்றார்.

சிறப்பு விருந்தினர் சுவாமி மேகநாத் சாய் அவர்கள் பேசுகையில் மகாபாரதத்தில் பாண்டவர்கள் ஒவ்வொருவரும் தனித்தன்மை மிக்கவர்களாக இருப்பார்கள் .எடுத்துக்காட்டாக அர்ஜுனன் வில்வித்தையில் சிறந்தவர் எப்பொழுதெல்லாம் மகாபாரதத்தில் அர்ஜுனனை நினைக்கிறேனோ அப்பொழுது நம் குருகுலம் பள்ளியின் தாளாளர் அர்ஜுனன் நினைவுக்கு வருகிறார். நல்லதை நினைத்து நல்லதையே செய்தால் நமக்கு பலன் கிடைக்கும்.

ஆசிரியர்கள் பிரம்மனுக்கு சமம். இத்தொழில் கிடைக்க பல ஜென்ம புண்ணியம் செய்திருக்க வேண்டும். கோடீஸ்வரர் ஆவது எளிது, ஆசிரியராக இருப்பதுவே கடினம். ஆசிரியர் பணி அறப்பணி எல்லாராலும் எல்லோரையும் உருவாக்கி விட முடியாது ஆனால் ஆசிரியர்களால் மட்டுமே அது சாத்தியம் என்பதை கூறினார்

ஒரு செயலை பத்தாயிரம் முறை பயிற்சி செய்ய வேண்டும் எடுத்துக்காட்டாக கிரிக்கெட் வீரர்களான வி ராத் கோலி, தோனி ஆகியோர் சலிப்பில்லாமல் பலமுறை எடுக்கும் பயிற்சியால் மட்டுமே அவர்களது கவனம் சிதையாமல் உள்ளது ஆகவே பயிற்சி என்ப து மிகவும் அவசியம் என்றார்.

இறுதியில் மாணவன் ரித்திக் நன்றியுரை வழங்க மாணவன் சாம் ஹர்ஷித் இசைக்கருவி கொண்டு தேசிய கீதத்தை வாசித்தார். விழாவில் ஆசிரியர்கள், பள்ளி மாணவ, மாணவியர்கள், பெற்றோர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# நீலகிரியில் வாக்கு எண்ணும் மையத்தில் கண்காணிப்பு கேமரா பதிவு காட்சிகள்: டிவி திரையில் ஒளிபரப்பாகாததால் பரபரப்பு

ஊட்டி, ஏப்.28-

நீலகிரியில் வாக்கு எண்ணும் மையமான அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் கண்காணிப்பு கேமரா பதிவு காட்சிகள் டிவி திரையில் திடீரென ஒளிபரப்பாகாததால் பரபரப்பு ஏற்பட்டது.



**நாடாளுமன்றத் தேர்தல்**

நீலகிரி நாடாளுமன்ற தொகுதிக்கான தேர்தல் கடந்த 19ஆம் தேதி நடைபெற்றது. இதன்படி இரு மின்னணு வாக்குபதிவு இயந்திரங்கள், தலா ஒரு கட்டுபாட்டு கருவிகள், விவிபேட் என மொத்தம் 7,942 இயந்திரங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டன. நீலகிரி தொகுதியில் 70.93 சதவீத வாக்குகள் பதிவானது.

இதைத்தொடர்ந்து ஊட்டி, குன்னூர், கூடலூர், அவிநாசி, பவானிசாகர், மேட்டுப்பாளையம் ஆகிய பகுதிகளில் இருந்து வாக்கு எண்ணும் மையமான ஊட்டி அரசு பாலிடெக்னிக் கல்லூரிக்கு வாக்குப்பதிவு எந்திரங்கள் போலீஸ் பாதுகாப்புடன் கொண்டு வரப்பட்டன.

இதன் பின்னர் வாக்குப்பதிவு இயந்திரங்கள் வாக்கு எண்ணும் ஸ்ட்ராங் ரூம் அறைக்கு கொண்டு செல்லப்பட்டு ஏற்கனவே கட்டமிடப்பட்ட இடத்தில் வைக்கப்பட்டு தேர்தல் அதிகாரிகள் முன் சீல் வைக்கப்பட்டன.

இதையடுத்து துப்பாக்கி ஏந்திய போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும் அரசியல் கட்சி சார்பாக முகவர்கள் அங்கு தங்கி பணியாற்றி வருகின்றனர்.

**கேமரா பதிவுகள்**

இங்கு 180 கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு போலீசார் கட்டுப்பாட்டு அறை மூலம் கண்காணித்து வருகின்றனர். இதே போல் அரசியல் கட்சி வேட்பாளர்களின் முகவர்கள் வாக்கு எண்ணும் மையத்தில் தங்கி இருந்து ஓட்டுப்பதிவு எந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள அறையின் கண்காணிப்பு கேமரா காட்சிகளை டிவி மூலம் பார்வையிட்டு கண்காணித்து வந்தனர்.

இந்த நிலையில் நேற்று மாலை முகவர்கள் அமரும் இடத்தில் கண்காணிப்பு கேமரா பதிவுகள் திடீரென டிவி திரையில் ஒளிபரப்பாகாமல் போய்விட்டதால் பரபரப்பு ஏற்பட்டது. உடனடியாக இதுகுறித்து அங்குள்ள தொழில்நுட்பபிரிவு அலுவலர்களுக்கு தகவல் கொடுக்கப்பட்டு அவர்கள் வந்து சரி செய்தனர்.

இதன் பின்னர் 20 நிமிடங்களுக்கு பிறகு வழக்கம் போல் கண்காணிப்பு கேமரா பதிவுகள் திரையில் இயங்கியது. முன்னதாக தேர்தல் நடத்தும் அலுவலரும் கலெக்டருமான அருணா சம்பவ இடத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து தொழில்நுட்ப கோளாறு பிரச்சினையை உடனடியாக சரி செய்யுமாறு அறிவுறுத்தினார்.

இதுகுறித்து தேர்தல் பிரிவு அதிகாரிகள் கூறுகையில், கண்காணிப்பு கேமரா வழக்கம்போல் இயங்கி காட்சிகள் சேமிக்கப்பட்டு வந்துள்ளது கண்காணிப்பு கேமராவில் பதிவான காட்சிகள் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக டிவியில் மட்டும் வெளியாகவில்லை. 20 நிமிடத்தில் இந்த பிரச்சனை சரி செய்யப்பட்டு தற்போது வழக்கம்போல் இயங்குகிறது. என்றனர்.

# நந்தா பொறியியல் தொழில்நுட்ப கல்லூரி மாணவ-மாணவிகளுக்கு பணி நியமன ஆணை

ஈரோடு, ஏப். 28:

நந்தா பொறியியல் தொழில்நுட்ப கல்லூரிகளில் நடப்பு கல்வியாண்டில் படித்து பன்னாட்டு நிறுவனங்களில் வேலை வாய்ப்பினை பெற்ற 1,516 மாணவ-மாணவிகளுக்கு பணி நியமன உறுதியாணை வழங்கப்பட்டது. ஈரோடு நந்தா பொறியியல் கல்லூரி மற்றும் தொழில்நுட்ப கல்லூரிகளில் நடப்பு கல்வியாண்டில் பல்வேறு பன்னாட்டு, தேசிய அளவிலான நிறுவனங்கள் மூலமாக வேலை வாய்ப்பு பெற்ற மாணவ-மாணவிகளுக்கு பணி நியமன ஆணை வழங்கும் விழா 'வேலை வாய்ப்பு தினம்' என்ற தலைப்பில் நடைபெற்றது. விழாவுக்கு, ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் தலைவர் வி.சண்முகன் தலைமை தாங்கி, பேசினார். ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் செயலாளர் எஸ்.நந்தகுமார் பிரதீப், நந்தா கல்வி நிறுவனங்களின் செயலாளர் எஸ்.திருமூர்த்தி, முதன்மை கல்வி அதிகாரி எஸ்.ஆறுமுகம் ஆகியோர் முன்னிலை வகித்து பேசினர். சிறப்பு அழைப்பாளராக தூத்துக்குடி சதர்ன் பெட்ரோ கெமிக்கல் இன்டஸ்டிரிஸ் நிறுவன மனிதவள மேம்பாட்டு தலைவர் சிவக்குமார் ஜெயராமன் பங்கேற்று, நந்தா கல்வி நிறுவனங்களின் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி துறைகளின் மூலம் நடப்பு கல்வியாண்டில் 118க்கும் மேற்பட்ட பன்னாட்டு மற்றும் தேசிய அளவிலான நிறுவனங்களில் வேலை வாய்ப்பினை பெற்ற 1,516 மாணவ-மாணவிகளுக்கு பணிநியமன உறுதி சான்றிதழ்களை வழங்கி பேசினார். இவ்விழாவில், நந்தா பொறியியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் யு.எஸ்.ரகுபதி, நந்தா தொழில்நுட்ப வளாகத்தின் நிர்வாக அதிகாரி ஏ.கே.வேலுசாமி மற்றும் மாணவ-மாணவிகள், பெற்றோர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். முன்னதாக நந்தா கல்வி நிறுவனங்களின் மனிதவள தலைவர் கே.வி.பிரபு வரவேற்றார். முடிவில், நந்தா தொழில்நுட்ப கல்லூரியின் முதல்வர் எஸ்.நந்தகோபால் நன்றி கூறினார்.





**ஈரோடு கருங்கல்பாளையம் பகுதி திமுக சார்பில் பகுதி செயலாளர் குறிஞ்சி தண்டபாணி தலைமையில் பொது மக்களுக்குநீர்மோர்பழங்கள்வழங்கப்பட்டதுஇதில்காங்கிரஸ் மண்டல தலைவர் ஜாபர் சாதிக் கவுன்சிலர் சபுராமாசாதிக் மற்றும் வார்டு பகுதி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்**



**தமிழக முதலமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஈரோடு தெற்கு மாவட்ட செயலாளரும் அமைச்சருமான முத்துசாமி ஆலோசனைப்படி ஈரோடு வீரப்பன் சத்திரம் பகுதி திமுக சார்பில் துணைமேயர் ஆர் செல்வராஜ் தலைமையில் நீர் மோர் பந்தல் அமைக்கப்பட்டு பொதுமக்களுக்கு நீர்மோர் மற்றும் பழங்கள் வழங்கப்பட்டது**

# ஈரோடு கருங்கல்பாளையம் திமுக சார்பில் பொது மக்களுக்கு நீர்மோர் பந்தல் திறப்பு



**ஈரோடு ஏப் 28**

முதலமைச்சருமான வேண்டுகோளுக்கிணங்க அமைச்சருமான சு-முத்துசாமி ஆலோசனையுடன் ஈரோடு பஸ் நிலையத்தில் கருங்கல்பாளையம் பகுதி கழகம் சார்பில் நீர் மோர் பந்தல் அமைக்கப்பட்டது.

மாநகரக் கழக செயலாளர் மு-சுப்பிரமணியம் மாநில இளைஞரணி துணை செயலாளரும் ஈரோடு நாடாளுமன்ற தொகுதி வேட்பாளருமான கே-ஈ-பிரகாஷ் மாவட்ட பொருளாளர் பி கே பழனிசாமிஆகியோர் முன்னிலையில் ஈரோடு மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம் துவக்கி வைத்தார்கள்

இந்நிகழ்ச்சியில் மா. சு. ராதாகிருஷ்ணன் தொ. மு. ச. தங்கமுத்து, பாலசுந்தரம் மாமன்ற உறுப்பினர்கள் இரா. ஜெயந்தி, புவனேஸ்வரி செந்தில்குமார் பகுதிபிரதிநிதி அண்ணாதுரை வட்டக் கழக செயலாளர்கள் என்.வி பூபாலன் , பி பிரகாஷ் , ஹரிஹரன், பாலன், பாத்திமா ரங்கதுரை, முகமது மீரான், ராம், மூர்த்தி, ஜெகதீசன், மணிகண்டன், மோகன், மற்றும் கோட்டை பகுதிக்கு உட்பட்ட வட்டக் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், பொதுமக்கள் பெருமளவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்நிகழ்ச்சியை பகுதி கழக செயலாளரும் வணிகர் நலவாரிய நிர்வாகக்குழு உறுப்பினருமான பொ. இராமச்சந்திரன் செய்திருந்தார்.

# ஊட்டி குட்ஷெப்பர்டு சர்வதேச பள்ளியில் கலைகள் மற்றும் அறிவியலின் சக்தி லாசி கலையரங்கம்

**ஊட்டி, ஏப்.28-**

ஊட்டியில் உள்ள குட்ஷெப்பர்ட் சர்வதேச பள்ளியில் 'ஷேப்பிங் டுமாரோ' கலைகள் மற்றும் அறிவியலின் சக்தி லாசி கலையரங்கம் நடந்தது. இந்த நிகழ்வில் 150 பங்கேற்பாளர்கள் பங்கேற்று பயனடைந்தனர்.



பள்ளி அரங்கில் நடைபெற்ற இந்த சிம்போசியத்தில் பல்துறை, லிபரல் ஆர்ட்ஸ் மற்றும் சமூக அறிவியலின் குறிப்பிடத்தக்க பங்கைப் புரிந்துகொள்வதற்கான ஒரு கலங்கரை விளக்கமாக செயல்பட்டது. பங்கேற்பாளர்கள் தொடர்ச்சியான மாஸ்டர் கிளாஸ்கள், முக்கிய உரைகள் மற்றும் ஊடாடும் வழக்கு ஆய்வுகளில் ஈடுபட்டனர். லிபரல் ஆர்ட்ஸ் கல்வியின் முக்கிய கருத்துக்கள், சவால்கள் மற்றும் உலகளாவிய முன்னோக்குகளை ஆராய வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில், கல்வி தடைகளை சமாளிப்பது, லிபரல் ஆர்ட்ஸ் பற்றிய பொதுவான தவறான கருத்துகளை புனைவுகளை உடைப்பது மற்றும் இந்தியா மற்றும் உலகெங்கிலும் உள்ள சிறந்த கல்லூரிகளை காட்சிப்படுத்துவது பற்றிய அமர்வுகள் ஆகியவை அடங்கும். கூடுதலாக, இந்த நிகழ்வு ஒரு லிபரல் ஆர்ட்ஸ் கல்வியின் தொழில்முறை மற்றும் தனிப்பட்ட தாக்கத்தை அழுத்தமான வெற்றிக் கதைகள் மற்றும் அதிநவீன ஆராய்ச்சி நுண்ணறிவுகள் மூலம் வெளிச்சம் போட்டுக் காட்டியது. இந்த சிம்போசியம், பங்கேற்பாளர்களுக்கு அறிவை வழங்குவது மட்டுமல்லாமல், தகவலறிந்த முடிவுகளை எடுக்கவும், லிபரல் ஆர்ட்ஸ் கல்வியில் உலகளாவிய வாய்ப்புகளை ஆராயவும் ஊக்குவிக்கிறது. இந்நிகழ்வு இன்றைய உலகில் இந்தத் துறையின் முக்கியமான முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டியது. சிம்போசியம் பங்கேற்றவர்கள், அடுத்த தலைமுறையினரை லிபரல் ஆர்ட்ஸில் ஒரு நம்பிக்கைக்குரிய எதிர்காலத்தை நோக்கி வழிநடத்தவும் தயாராக உள்ளனர் என்பது தெரிந்தது.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
Old No:5, New No: 9, kannan Street, Korukkupet, Chennai - 600021.
Ph: 044-25952015,9842165236
E-Mail: chennaiedi@thinaboomi.com
RNI.Regn No.55306/93
Editor:MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# மாவட்ட அளவிலான கோடைகால பயிற்சி முகாம் ஊட்டி, குன்னூரில் நாளை முதல் நடக்கிறது

**ஊட்டி, ஏப்.28-**

மாவட்ட அளவிலான கோடைகால பயிற்சி முகாம் ஊட்டி, குன்னூரில் நாளை முதல் நடக்கிறது. இதில் கலந்து கொள்வோர் அட்டை நகல் கண்டிப்பாக சமர்பிக்க வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து நீலகிரி மாவட்ட கலெக்டர் மு.அருணா வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு-

**கோடைகால பயிற்சி முகாம்**

நீலகிரி மாவட்டத்தில், உறைவிடம் சாரா கோடைக்கால பயிற்சி முகாம் 15 நாட்கள் நடத்தப்படவுள்ளது. அதனைதொடர்ந்து தடகளம், கூடைப்பந்து, கால்பந்து ஆகிய விளையாட்டுகளுக்கான கோடைக்கால பயிற்சி முகாம் உதகை மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்ட திறந்த வெளி விளையாட்டு அரங்கத்திலும், வளை கோல்பந்து விளை யாட் டு க ளுக் கான கோடைக்கால பயிற்சி முகாம் குன்னூர் அறிஞர் அண்ணா மேல்நிலைபள்ளி மைதானத்திலும் நாளை (29-04-2024) முதல் 13-05-2024 வரை நடத்தப்படவுள்ளது.

அதில் 10 முதல் 18 வயதிற்கு உட்பட்ட மாணவ மாணவியர்கள் கலந்து கொள்ளலாம். கோடைக்கால பயிற்சி முகாம் காலை 6.00 மணி முதல் 8.00 வரையிலும், மாலை 4.30 முதல் 6.30 வரையிலும் நடத்தப்படும். அதற்கு பயிற்சி கட்டணம் தலைமையகத்தால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. பயிற்சி கட்டணம் ரூ.200 வீதம் ஆன்லைன் மூலமாக மட்டுமே பெறப்படும். எக்காரணம் கொண்டும் ரொக்கமாகப் பெறப்படாது. மேலும் இப்பயிற்சி முகாமில் கலந்து கொள்பவர்கள் மாவட்ட விளையாட்டு (ம) இளைஞர் நலன் அலுவலர் அலுவலகத்திற்கு வந்து முன்பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**ஆதார் அவசியம்**

பயிற்சி முகாமில் கலந்து கொள்பவர்கள் இன்று(28-04-2024) மாலை 6.00 மணி வரை மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் பெயர்களை பதிவு செய்து கொள்ளலாம். கலந்து கொள்ளும் அனைவரும் ஆதார் கார்டு நகல் கண்டிப்பாக சமர்பித்தல் வேண்டும். பயிற்சி முகாமில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் பங்கு பெற்றதற்கான சான்றிதழ் வழங்கப்படும். கோடைகால பயிற்சி வகுப்பு நடைபெற உள்ள விளையாட்டுக்களின் விவரங்களை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் றறற.ளனயவ.வn.பழஎ.in அதிகாரபூர்வ இணையதளம் அல்லது கீழ் குறிப்பிட்டுள்ள ஸ்கேன் செய்து தெரிந்து கொள்ளலாம். இவ்வாறு மாவட்ட கலெக்டர் மு.அருணா தெரிவித்துள்ளார்.

**BEFORE THE II ASSISTANT JUDGE, CITY CIVIL COURT AT MADRAS**
**O.S.No. 7392 of 2022**
CANARA BANK
ANNA NAGAR 'P' BLOCK BRANCH ........Plaintiff
Vs
Mr.R.SHEELA & Mr.P.RUBAN, ....... Defendants.
To,
1. Mrs.R.SHEELA, W/o.Ruban,
Mr.P.RUBAN, S/o.Paul,
Both Defendants 1 & 2, are residing at No.18/37, Sivalingam Street, Ayanavaram, Chennai – 600 023.
Sir,
In the above suit filed by the Plaintiff against you, for recovery of sum of Rs.34,936.18, together with further interest and costs as prayed for in the Plaint, The Hon'ble II Assistant Judge, City Civil Court at Madras Ordered Notice to you returnable by 20-06-2024. Take notice that if you fails to attend and appear either - in - person or through an Advocate at 10.30 A.M. on 20-06-2024 before The Hon'ble II Assistant Judge, City Civil Court at Madras, the above matter will be heard and decided in your absence.
[J.SRINIVASAN]
Counsel for Plaintiff.

**BEFORE THE XIV ASSISTANT JUDGE, CITY CIVIL COURT AT MADRAS**
**O.S.No. 6450 of 2022**
CANARA BANK
ANNA NAGAR 'P' BLOCK BRANCH ........Plaintiff
Vs
Mr.L.RAMU ....... Defendant.
To,
Mr.L.RAMU, S/o. Loganathan, No.14, R.E.Nagar, 6th Street, Porur, Chennai – 600 116.
Sir,
In the above suit filed by the Plaintiff against you, for recovery of sum of Rs.1,40,755/-, together with further interest and costs as prayed for in the Plaint, The Hon'ble XIV Assistant Judge, City Civil Court at Madras Ordered Notice to you returnable by 10-06-2024. Take notice that if you fails to attend and appear either - in - person or through an Advocate at 10.30 A.M. on 10-06-2024 before The Hon'ble XIV Assistant Judge, City Civil Court at Madras, the above matter will be heard and decided in your absence.
[J.SRINIVASAN]
Counsel for Plaintiff.

**BEFORE THE II ASSISTANT JUDGE, CITY CIVIL COURT AT MADRAS**
**O.S.No. 7390 of 2022**
CANARA BANK
ANNA NAGAR 'P' BLOCK BRANCH ........Plaintiff
Vs
Mr.M.PALANI, ....... Defendant.
To,
Mr.M.PALANI, S/o.Murugesan No.13/25, Housing Board Slum, Athipettu, I.C.F Colony, Ayanambakkam Chennai – 600 058.
Office at: No. 140, Mettu Street, Ayanavaram, Chennai- 600 023.
Sir,
In the above suit filed by the Plaintiff against you, for recovery of sum of Rs.47,401.42, together with further interest and costs as prayed for in the Plaint, The Hon'ble II Assistant Judge, City Civil Court at Madras Ordered Notice to you returnable by 15-06-2024. Take notice that if you fails to attend and appear either - in - person or through an Advocate at 10.30 A.M. on 15-06-2024 before The Hon'ble II Assistant Judge, City Civil Court at Madras, the above matter will be heard and decided in your absence.
[J.SRINIVASAN]
Counsel for Plaintiff.

**ENROLLMENT NOTICE**
After 10 days of the publication of this notice and within three months thereafter.I, NANDINI.AD/o. Anandaraj.V aged 32 years, Permanently Residing at, No.14, Kamarajar Street, Guruswamy Nagar, Mugalivakkam, Chennai - 600 125.. intend having my enrollment as an Adocate moved before the Bar Council of Tamilnadu, Bar Council Buildings High Court Campus, Chennai - 104. Those who have any valid objections may notify the same to Bar Council within 10 days.
NANDINI.A

# மேம்பட்ட செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பத்தை பயன்படுத்தி குடும்ப உறுப்பினர் போல் பேசி மோசடி செய்யும் கும்பல்: சைபர் கிரைம் கூடுதல் இயக்குனர் எச்சரிக்கை

**சென்னை,ஏப்.28**

சைபர் மோசடி செய்பவர், மேம்பட்ட செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி, அவசர தொலைபேசி அழைப்புகளில் குடும்ப உறுப்பினர்கள் போன்ற நம்பகமான நபர்களின் குரல்களைப் பிரதிபலிக்கும் வகையில் குரல் குளோனிங்கைப் பயன்படுத்துகிறார். அவசர உணர்வை உருவாக்குவதன் மூலம், பாதிக்கப்பட்டவர்களின் நம்பிக்கையையும் உணர்ச்சிகளையும் சுரண்டி விரைவாக பணத்தை அனுப்பும் படி ஏமாற்றுகிறார். இந்த ஏமாற்றும் தந்திரம் சைபர் கிரைமின் வளர்ச்சியடைந்து வரும் அதிநவீனத்தை எடுத்துக்காட்டுகிறது. இது போன்ற மோசடி திட்டங்களுக்கு பலியாகாமல் மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். இந்த மோசடி எவ்வாறு நிகழ்கிறது பாதிக்கப்பட்டவருக்குத் தெரிந்த குடும்ப உறுப்பினர் அல்லது நண்பர் போல் காட்டிக் கொண்டு, மோசடி செய்பவரிடமிருந்து பாதிக்கப்பட்டவருக்கு தொலைபேசி அழைப்பு வருகிறது. மோசடி செய்பவர் பாதிக்கப்பட்டவருக்கு அவசர உணர்வு தூண்டுவதற்கு பல்வேறு தந்திரங்களைப் பயன்படுத்துகிறார். உடனடி உதவி தேவைப்படும் இக்கட்டான சூழ்நிலையில் இருப்பதாகக் கூறி, அழுது கொண்டே அல்லது கெஞ்சும் தோனியைப் பயன்படுத்துகிறார். மோசடி செய்பவர், தான் ஆள்மாறாட்டம் செய்யும் நபரின் குரலை குளோன் செய்ய அதிநவீன செயற்கை நுண்ணறிவு (AI) மென் பொருளைப் பயன்படுத்துகிறார். அதற்க்கு, ஆள்மாறாட்டம் செய்யப்படும் நபரின் குரல் மாதிரியை அவர்களின் சமூக ஊடக இடுகை/வீடியோக்கள் மூலம் பெறுகிறார்கள். இந்த தொழில் நுட்பம் பாதிக்கப்பட்டவரின் நம்பகமான தொடர்பின் குரல், உள்ளுணர்வு மற்றும் உணர்ச்சி நுணுக்கங்களை நம்பத்தகுந்த வகையில் பிரதிபலிக்கிறது. சுருக்கமாகச் சொன்னால், சைபர் குற்றங்களைச் செய்வதற்கு AI குரல் குளோனை உருவாக்கி பயன்படுத்துகிறது.

அவர்கள் அவசர உணர்வு மற்றும் நம்பிக்கையை ஏற்படுத்தியவுடன், மோசடிசெய்பவர் பாதிக்கப்பட்டவரை உடனடியாக பணத்தை மாற்றுமாறு கோருகிறார். பரிவர்த்தனையை விரைவுப்படுத்த யுனிபைட் பேமெண்ட்ஸ் இன்டர்பேஸ் (யுபிஐ) போன்ற வேகமான மற்றும் வசதியான கட்டண முறைகளைப் பயன்படுத்துமாறு அவர் பரிந்துரைக்கின்றார்.

அக்கறையாலும், நேசிப்பவருக்கு உதவ வேண்டும் என்ற ஆர்வத்தாலும் பாதிக்கப்பட்டவர், அழைப்பாளரின் நம்பகத்தன்மையை சரிபார்க்காமல் மோசடி செய்பவரின் கோரிக்கைகளுக்கு இணங்குகிறார். பணப்பரிமாற்றம் முடிந்த பிறகு, பாதிக்கப்பட்டவர் தங்கள் குடும்ப உறுப்பினர் அல்லது நண்பரை தொடர்பு கொள்ள முயலும் போது தான் ஏமாற்றப்பட்டதை உணருகின்றார்.

இது போன்ற மோசடிகளில் இருந்து பாதுகாத்துக் கொள்ள சைபர் கிரைம் கூடுதல் காவல்துறை இயக்குநர், சஞ்சய்குமார் கூறுவதாவது :அழைக்கும் நபரின்அடையாளத்தை எப்போதும் சரிபார்க்கவும்.ஏதேனும் நடவடிக்கை எடுப்பதற்கு முன், அவர்களின்அடையாளத்தை உறுதிப்படுத்த, அறியப்பட்ட/சரி பார்க்கப்பட்ட எண்ணின் மூலம் அழைக்கப்படும் அழைப்பாளரைத் தொடர்பு கொள்ளவும்.குரல் குளோனிங் மோசடி உட்பட பொதுவான மோசடிகளைப் பற்றி தொடர்ந்து அறிந்திருங்கள். முக்கியமான உரையாடல்கள் அல்லது பரிவர்த்தனைகளில் ஈடுபடும் முன் அழைப்பாளர்களின் அடையாளத்தைச் சரி பார்க்க, செய்தியிடல் பயன்பாடுகள் அல்லது வீடியோ அழைப்புகள் போன்ற பாதுகாப்பான தகவல் தொடர்பு சேனல்களைப் பயன்படுத்தவும்.தெரியாத எண்களிலிருந்து வரும் தொலைபேசி அழைப்புகள் அல்லது செய்திகளைப் பெறும் போது எச்சரிக்கையாக இருங்கள்.

நீங்கள் இது போன்ற மோசடிக்கு ஆளாகியிருந்தால், உடனடியாக சைபர் கிரைம் கட்டணமில்லா உதவி எண் 1930 ஐ டயல் செய்து சம்பவத்தைப் புகாரளிக்கவும் அல்லது www.cybercrime.gov.in என்ற இணையதளத்தில் உங்களது புகாரைப் பதிவுசெய்யவும்.

# கோயம்பேடு மேம்பாலத்தில் இளம்பெண்ணை கொடூரமாக தாக்கிய இளைஞரிடம் விசாரணை

**சென்னை ஏப் 28-**

சென்னை கோயம்பேடு மேம்பாலத்தில் இளைஞர் மற்றும் பெண் தோழி இருவரும் இருச்சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தனர். திடீரென்று அவர்களுக்குள் வாக்குவாதம் ஏற்பட்டது. பின்னர் அந்த இளைஞர் அந்த பெண் தோழியை சரமாரியாக தாக்கினார். வாக்குவாதம் தீவிரம் அடைந்த நிலையில் அந்த வாலிபர் அந்த பெண்ணை தனது ஹெல்மெட்டால் தாக்கியுள்ளார். நிலை தடுமாறிய அந்த பெண் சம்பவ இடத்திலேயே மயங்கி விழுந்தார். இதை அந்த வழியாக வந்த வக்கீல் ஒரு தனது செல்போனில் வீடியோவாக பதிவேற்றினார். இதை கண்ட அந்த வாலிபர் சற்று சுதாரித்து கொண்டு எதுவும் நடைபெறாதது போல், மயங்கிய அந்த பெண்ணை காப்பாற்றுவது போல் நடகமாடினார். சாலையில் செல்லும் வாகன ஓட்டிகளையும், வழக்கறிஞரையும் உதவிக்கு அழைப்பது போலும் நாடகமாடினார். இதை செல்போனில் வீடியோ எடுத்த வழக்கறிஞர் மற்றும் அந்த வாலிபர் இருவரும் அந்த பெண்ணை அருகில் உள்ள மருத்துவமனை அழைத்து சென்றனர். அந்த பெண் தற்போது சிகிச்சை பெற்று வரும் நிலையில் பெண்ணை காப்பாற்றுவது போல் உள்ள வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி உள்ளது.இந்த சம்பவத்தையடுத்து கோயம்பேடு போலீசார் அந்த வாலிபரின் வண்டி எண்ணை வைத்தும், அங்குள்ள சிசிடிவி கேமிராக்களை ஆய்வு செய்தும் விசாரணை நடத்தி வந்த நிலையில் வண்ணாரப்பேட்டை பகுதியை சேர்ந்த ரோஷன் என்ற இளைஞரை பிடித்து விசாரணை செய்து வருகின்றனர்.இதையடுத்து அந்த வாலிபருக்கும், பெண்ணும் இடையே ஏன் வாக்குவாதம் ஏற்பட்டது என்றும், வாலிபர் ஏன் அந்த பெண்ணை தாக்கினார் என்றும் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். அந்த பெண்ணையும் அழைத்து விசாரணை நடத்த திட்டமிட்டுள்ளனர். அந்த வாலிபர் மீது ஏதேனும் தவறு இருந்தால் வழக்குப்பதிவு செய்யவும் போலீசார் திட்டமிட்டுள்ளனர்.



திருச்சி கலையரங்கத்தில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் என் கல்லூரி கனவு உயர்கல்வி வழிகாட்டுதல் நிகழ்ச்சி மாவட்ட வருவாய் அலுவலர் ர.ராஜலட்சுமி தலைமையில் நடைபெற்றது.



திருச்சி ஆண்டவன் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் ஆண்டு விழா,விளையாட்டு மற்றும் கலைவிழா ஆகிய முப்பெரும் விழா நடைபெற்றது. இதில் கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் ஆடிட்டர் ஆர்.வெங்கடேஷ் ,சிறப்பு விருந்தினராக சுதந்திர போராட்ட தியாகி மணப்பாறை அ.சுந்தரம்,முதல்வர்எம்.பிச்சைமணி,உடற்கல்விஇயக்குநர் பேரா. மு.கருப்பையா, கலைத்துறை ஒருங்கிணைப்பாளர் கா.பிரபு, உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# வெடிகுண்டு மிரட்டல் எதிரொலி: சென்னை விமான நிலையத்தில் கூடுதல் பாதுகாப்பு

**சென்னை ஏப் 28-**

கொல்கத்தா விமான நிலைய மேலாளருக்கு மர்ம நபர் ஒருவர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, "கொல்கத்தா உள்பட 4 விமான நிலையங்களில் குண்டு வெடிக்கும் என இந்தியில்கறிவிட்டு இணைப்பை துண்டித்து விட்டதாக கூறப்படுகிறது.இந்த வெடிகுண்டு மிரட்டல் தொடர்பாக கொல்கத்தா விமான நிலையத்தில் இருந்து, டெல்லியில் உள்ள இந்திய விமான நிலைய ஆணையத்துக்கு அவசரமாக தகவல் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து இந்திய விமான நிலைய ஆணையம் மற்றும் விமான போக்குவரத்து பாதுகாப்பு துறை இணைந்து நாடு முழுவதும் உள்ள அனைத்து விமான நிலையங்களிலும் பாதுகாப்பு ஏற்பாடுகளை பலப்படுத்துவதோடு, பயணிகள் மற்றும் விமானங்களில் ஏற்றப்படும் பார்சல்கள் ஆகியவற்றை தீவிரமாக கண்காணித்து, பரிசோதிக்க உத்தரவிடப் பட் டது.அ தன் படி சென்னை விமான நிலையத்திலும் நேற்று பிற்பகலில் இருந்து கூடுதல் பாதுகாப்பு போடப் பட் டுள் ளது. சென்னை விமான நிலையத்தில் உள்ள 3 அடுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள், தற்போது 5 அடுக்கு பாதுகாப்பாக அதிகரிக்கப்பட்டுள்ளது.சென்னை உள்நாடு மற்றும் சர்வதேச முனையங்களில் இருந்து, விமானங்களில் பயணிக்க வரும் அனைத்து பயணிகளையும் தீவிரமாக கண்காணித்து, சோதனைகள் நடத்திய பின்னரே உள்ளே செல்ல அனுமதிக்கின்றனர். விமானத்தில் ஏற்ற கொண்டு வரப்படும் பார்சல்கள் அனைத்தும் தீவிரமாக பரிசோதிக்கப்படுகின்றன.

ஆனால் இதுவரை நடத்தப்பட்ட சோதனைகளில் எந்தவிதமான வெடி பொருட்களும் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனாலும் டெல்லியில் இருந்து மறுஉத்தரவு வரும் வரையில் இந்த பாதுகாப்பு சோதனைகள் தொடர்ந்து நடைபெறும் என்று கூறப்படுகிறது.பயணிகளுக்கு கூடுதல் சோதனைகள் நடப்பதால், சென்னை விமான நிலையத்தில் உள்நாட்டு விமான பயணிகள், விமானம் புறப்படும் நேரத்துக்கு ஒன்றரை மணி நேரம் முன்னதாகவும், சர்வதேச விமான பயணிகள் 3 மணி நேரம் முன்னதாகவும், விமான நிலையத்துக்கு வரும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# நாகையில் உலக பூமி தினத்தை முன்னிட்டு நெகிழி விழிப்புணர்வு ஓவியப்போட்டி



**நாகப்பட்டினம்,ஏப்.28-**

நாகப்பட்டினம் மாவட்டம் இகோட்டோ சுற்றுச்சூழல் அமைப்பின் சார்பாக உலக பூமி தினத்தை முன்னிட்டு நாகூர் கிரசண்ட் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் மாவட்ட அளவிலான நெகிழி விழிப்புணர்வு ஓவியப் போட்டி நேற்று நடைபெற்றது.

ஜூனியர் மற்றும் சீனியர் பிரிவில் முதல் சுற்றில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகள் மாவட்ட அளவிலான போட்டியில் கலந்துகொண்டனர்.நிகழ்ச்சிக்கு இகோட்டோ சுற்றுச்சூழல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் செல்வி ஜெயஸ்ரீ தலைமை தாங்கினார்.

நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினர்களாக நாகப்பட்டினம் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் துணை செயற் பொறியாளர் எஸ்.வெற்றி செல்வம் நாகப்பட்டினம் இல்லந்தேடி கல்வியின் ஒருங்கிணைப்பாளர் ஆசிரியர் அசோக்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.ஓவியர் உமா சங்கர் நடுவராக செயல்பட்டார்.ஜூனியர் பிரிவில் திருமருகல் அரசினர் மேல்நிலைப் பள்ளியின் மாணவன் பிரதீஸ் முதலிடமும் வேதாரண்யம் நெய்விளக்கு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியின் மாணவி சமீரா ஸ்ரீ இரண்டாமிடமும் நாகை அமிர்தா வித்யாலயம் பள்ளி மாணவி ஹரிதாஸ்ரீ மூன்றாமிடமும் பெற்றனர்.சீனியர் பிரிவில் சிஎஸ்ஐ மேல்நிலைப் பள்ளியின் மாணவி தேஜாஸ்ரீ முதலிடமும் குருக்கத்தி அரசினர் மேல்நிலைப் பள்ளியின் மாணவன் கவியரசன் இரண்டாமிடமும் நாகக்குடையான் அரசு உயர்நிலைப் பள்ளியின் மாணவி கனிஷ்கா மூன்றாமிடமும் பெற்றனர்.

வெற்றி பெற்றவர்களுக்கு பதக்கம் சான்றிதழ் புத்தகம் மற்றும் நாகப்பட்டினம் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திலிருந்து பெறப்பட்ட மீண்டும் மஞ்சப்பையும் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில் கலந்து கொண்ட சிறப்பு விருந்தினர்கள் நெகிழியை தவிர்த்து பூமியை காப்பது தொடர்பான கருத்துக்களை மாணவர்களிடம் எடுத்துக் கூறினர்.இகோட்டோ சுற்றுச்சூழல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் ஆசிரியர் சந்தோஷ் காட்சன் ஐசக் நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை செய்திருந்தார்.



கெருகம்பாக்கம் நாடார் சங்கம் சார்பில் தலைவர் டீ.உதயகுமார் ஏற்பாட்டில் நீர் மோர் பந்தலை பெருந்தலைவர் மக்கள் கட்சியின் தலைவர் என்.ஆர். தனபாலன் திறந்து வைத்து பொதுமக்களுக்கு வழங்கினார்.உடன் ஊராட்சி மன்ற தலைவர் ஜெகதீஸ்வரிசுந்தரேசன், அ.முத்துகுமார்,ஆனந்தராஜ்,முத்துரமேஷ்,மின்னல்எச்.ஸ்டிபன்,பாலமுருகன்,சுப்பிரமணியன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# சென்னையில் கஞ்சா மற்றும் வலி நிவாரண மாத்திரைகள் விற்ற 8 பேர் கைது

**சென்னை ஏப் 28-**

கிண்டி, பாரிமுனை, புழல், சூளைமேடு மற்றும் புனித தோமையர்மலை பகுதிகளில் கஞ்சா வைத்திருந்த 8 பேரை கைது செய்தனர்

அவர்களிடமிருந்து 11.55 கிலோ கிராம் கஞ்சா, 6,870 உடல்வலி நிவாரண மாத்திரைகளை போலிசார் பறிமுதல் செய்தனர்.சென்னை வடக்கு கடற்கரை காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில் காவல் குழுவினர் பாரிமுனை மற்றும் ராஜாஜி சாலை சந்திப்பு அருகே சட்ட விரோதமாக உடல்வலி நிவாரண மாத்திரைகள் வைத்திருந்த மனோஜ்குமார், என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து 6,870 நைட்ரவிட் உடல்வலி நிவாரண மாத்திரைகள் மற்றும் 1 செல்போன் பறிமுதல் செய்யப்பட்டது.

மேலும், அடையாறு, மது விலக்கு அமலாக்கப்பிரிவு இன்ஸ்பெக்டர் தலைமையிலான காவல் குழுவினர் கிண்டி, இரயில் நிலையம் அருகே கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு, அங்கு பையில் கஞ்சா மறைத்து வைத்திருந்த இப்ரான் ஷேக், என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து 7 கிலோ கஞ்சா மற்றும் 1 செல்போன் பறிமுதல் செய்யப்பட்டது.

இதே போல, புழல் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில் காவல் குழுவினர் புழல், காவாங்கரை மீன் மார்க்கெட் அருகில் சட்டவிரோத விற்பனைக்காக கஞ்சா வைத்திருந்த முத்துராஜா, என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து 1.5 கிலோ கஞ்சா மற்றும் பணம் ரூ.22,500/- பறிமுதல் செய்யப்பட்டது.மேலும், சூளைமேடு காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில், காவல் குழுவினர் சூளைமேடு, சண்முகனார் சாலை மற்றும் சக்திநகர் 5வது தெரு சந்திப்பு அருகே, பொலீரோ இலகுரக சரக்கு வாகனத்தில் கஞ்சா மறைத்து எடுத்து வந்த 1.சுரேஷ், 2.சிவா, வ/ஆகிய 2 பேரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து 1.95 கிலோ கஞ்சா மற்றும் பொலீரோ இலகுரக சரக்கு வாகனம் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டது.

மேலும், புனித தோமையர்மலை காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில், காவல் குழுவினர் ஆலந்தூர்,ஆர்.டி.ஒ. அலுவலகம் எதிரேயுள்ள பூங்காவில் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு, அங்கு சட்டவிரோதமாக கஞ்சா வைத்திருந்த 1.தினேஷ், 2.மகேந்திரன், 3.ஆதவன், ஆகிய 3 பேரை கைது செய்தனர். அவரகளிடமிருந்து 1.1 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது.

கஞ்சா மற்றும் உடல்வலி நிவாரண மாத்திரைகள் வைத்திருந்தது தொடர்பாக மொத்தம் 5 வழக்குகளில், 8 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு, 11.55 கிலோ கஞ்சா, 6,870 நைட்ரவிட் உடல்வலி நிவாரண மாத்திரைகள், ரொக்கம் ரூ.22,500/-, 2 செல்போன்கள் மற்றும் 1 இலகுரக சரக்கு வாகனம் பறிமுதல் செய்யப்பட்டது.கைது செய்யப்பட்ட மேற்படி 8 பேரை விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

# திருமருகலில் அதிமுக சார்பில் நீர், மோர் பந்தல் திறப்பு



**நாகப்பட்டினம்,ஏப்.28-**

நாகப்பட்டினம் மாவட்டம் திருமருகல் பேருந்து நிலையம் அருகில் கோடை காலத்தை ஒட்டி பொதுமக்கள் பயன்பெறும் வகையில் திருமருகல் அதிமுக வடக்கு ஒன்றியம் சார்பில் அமைக்கப்பட்ட நீர் மோர் பந்தல் திறப்பு விழா சனிக்கிழமை நடைபெற்றது.

விழாவிற்கு வடக்கு ஒன்றிய செயலாளர் ஆர்.ராதாகிருட்டிணன் தலைமை வகித்தார். தெற்கு ஒன்றிய செயலாளர் எம்.பக்கிரிசாமி முன்னிலை வகித்தார்.

கழக அமைப்பு செயலாளர் எஸ்.ஆசைமணி கலந்து கொண்ட நீர் மோர் பந்தலை திறந்து வைத்து பொதுமக்களுக்கு பழ வகைகள், நீர், மோர், குளிர்பானங்கள் உள்ளிட்டவற்றை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட பிரதிநிதி பெரியமணி, மாவட்ட துணை செயலாளர் அபுசாலிஹ், மாவட்ட இளைஞரணி தலைவர் ஆர்.ராம்சந்தர், திட்டச்சேரி நகர செயலாளர் டி.எஸ்.அப்துல் பாசித்,ஒன்றிய துணை செயலாளர் வி.திருமேனி, ஜெயலலிதா பேரவை ஒன்றிய செயலாளர் ஆ.ராஜேஸ்குமார், ஒன்றிய பொருளாளர் அருள்மணி, ஜெயலலிதா பேரவை மாவட்ட துணை செயலாளர் ரகுபதி, மாவட்ட இளைஞரணி துணை செயலாளர் சுரேஷ், மாவட்ட விவசாய அணி துணை செயலாளர் மரவாடி சேகர் உள்ளிட்ட அதிமுக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# சமுதாய வளர்ச்சிக்கு சிறப்பாக சேவையாற்றியோர் முதலமைச்சர் மாநில இளைஞர் விருதுக்கு விண்ணப்பிக்கலாம்: சென்னை கலெக்டர் தகவல்

**சென்னை, ஏப்.28-**

சமுதாய வளர்ச்சிக்குச் சிறப்பாக சேவையாற்றும் இளைஞர்கள் முதலமைச்சர் மாநில இளைஞர் விருதுக்கு விண்ணப்பிக்கலாம் என்று சென்னை கலெக்டர் ரஷ்மி சித்தார்த் ஜகடே தெரிவித்துள்ளார். சென்னை மாவட்ட கலெக்டர் ரஷ்மி சித்தார்த் ஜகடே வெளியிட்ட அறிவிப்பில் கூறியிருப்பதாவது:-

சமுதாய வளர்ச்சிக்குச் சிறப்பாக சேவையாற்றும் இளைஞர்களது பணியை அங்கீகரிக்கும் பொருட்டு முதலமைச்சர் மாநில இளைஞர் விருது ஒவ்வொரு ஆண்டும் சுதந்திரதினத்தன்று 15 வயது முதல் 35 வயது வரை உள்ள 3 ஆண்கள் 3 பெண்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இந்த விருது ரூ1,00,000 ரொக்கம், பாராட்டுப் பத்திரம் மற்றும் பதக்கம் ஆகியவைகளை உள்ளடங்கியதாகும். 2024ம் ஆண்டிற்கான முதலமைச்சர் மாநில இளைஞர் விருது எதிர் வரும் 15.8.2024 அன்று நடைபெறும் சுதந்திர தின விழாவில் வழங்கப்பட உள்ளது. இவ்விருதுக்கு 15 வயது முதல் 35 வயது வரையுள்ள ஆண் / பெண் ஆகியோர்

விண்ணப்பிக்கலாம்.1.4.2023 அன்று 15 வயது நிரம்பியவராகவும், 31.03.2024 அன்று 35 வயதுக்குள்ளாகவும் இருத்தல் வேண்டும். கடந்த நிதியாண்டில் (2023-24) அதாவது 1.4.2023 முதல் 31.03.24 வரை மேற்கொள்ளப்பட்ட சேவைகள் மட்டுமே கருத்தில் கொள்ளப்படும். விருதிற்கு விண்ணப்பிக்கும் முன்பு குறைந்த பட்சம் 5 வருடங்கள் தமிழகத்தில் குடியிருந்தவராக இருத்தல் வேண்டும். (சான்று இணைக்கப்பட வேண்டும்). விண்ணப்பதாரர்கள் சமுதாய நலனுக்காக தன்னார்வத்துடன் தொண்டாற்றியிருக்க வேண்டும். அவ்வாறு அவர்கள் செய்த தொண்டு, கண்டறியப்படக் கூடியதாகவும், அவளவிடக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும். மத்திய, மாநில அரசுகள், பொதுத்துறை நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், பள்ளிகளில் பணியாற்றுபவர்கள் இவ்விருதிற்கு விண்ணப்பிக்க இயலாது. விண்ணப்பதாருக்கு உள்ளூர் மக்களிடம் உள்ள செல்வாக்கு விருதிற்கான பரிசீலனையில் கணக்கில் கொள்ளப்படும்.இணைதளம் மூலம் விண்ணப்பிக்க 1.5.2024 முதல் கடைசி நாள் 15.5.2024 அன்று மாலை 4 மணி ஆகும். விண்ணப்பங்கள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய இணையதளமான (www.sdat.tn.gov.in) உள்ளது. ஆன்லைன் மூலம் மட்டுமே விண்ணப்பங்கள் சமர்ப்பித்தல் வேண்டும். மேலும் விவரங்களுக்கு மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர், மாவட்ட விளையாட்டு அரங்கம், நேரு பூங்கா, சென்னை-84. அலுவலகத்திலோ (அல்லது) தொலைபேசிஎண். 7401703480 (அல்லது) 044-26644794 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# அரியலூர் மாவட்ட அதிமுக சார்பில் தண்ணீர் பந்தல் திறப்பு



**அரியலூர்,ஏப்.28-**

அரியலூர் மாவட்டத்தில் அதிமுக சார்பில் கோடைக் கால தண்ணீர் பந்தல்கள் திறப்பு நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது.

அதிமுக மாவட்டச் செயலாளரும், முன்னாள் அரசு தலைமைக் கொறடாவுமான தாமரை எஸ்.ராஜேந்திரன் பங்கேற்று, திருமானூர் பேருந்து நிலையம், கீழப்பழூவூர் கடை வீதி, அரியலூர் பேருந்து நிலையம், அரியலூர் அடுத்த செந்துறை ரவுண்டானா ஆகியபகுதிகளில் கோடைக்கால தண்ணீர் பந்தல்களை திறந்து வைத்து பொதுமக்களுக்கு நீர் மோர், தர்பூசணி, வெள்ளரி, தண்ணீர் ஆகியவற்றை வழங்கினார். நிகழ்ச்சிகளில் முன்னாள் எம்எல்ஏ ப.இளவழகன், நகரச் செயலாளர் செந்தில், அம்மா பேரவை இணைச் செயலாளர் பிரேம்குமார், மாவட்ட அண்ணா தொழிற்ச்சங்க தலைவர் பாஸ்கர், ஒன்றியச் செயலாளர்கள் பாலு, செல்வராஜ், சாமிநாதன், வடிவழகன், வழக்கறிஞர் பிரிவு வெங்கடாஜலபதி, ராம.கோவிந்தராஜன், சாந்தி, சுகுமார் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

அதேபோல், செந்துறை அடுத்த ஆர்.எஸ்.மாத்தூரில் அதிமுக சார்பில் அமைக்கப்பட்டிருந்த தண்ணீர் பந்தலை பெரம்பலூர் மாவட்டச் செயலாளரும், முன்னாள் எம்எல்ஏவுமான இளம்பை ரா.தமிழ்ச்செல்வன் திறந்து வைத்து பொதுமக்களுக்கு நீர் மோர் உள்ளிட்டவற்றை வழங்கினார்.



திருச்சி புறநகர் வடக்கு மாவட்ட அதிமுக. ஸ்ரீரங்கம் பகுதி சார்பில், கோடைகால நீர் மோர் பந்தலை திருச்சி புறநகர் வடக்கு மாவட்ட செயலாளர்பரஞ்ஜோதி திறந்து வைத்தார். நிகழ்ச்சியில்,மாநில அமைப்பு செயலாளர்கள் வளர்மதி, ஆர்.மனோகரன். எம். ஜி.ஆர். இளைஞரணி மாநில இணை செயலாளர் பொன்.செல்வராஜ், மாவட்ட சிறுபான்மை நலப்பிரிவு செயலாளர் புல்லட் ஜான், மற்றும் பலர் உள்ளனர்.

**வாகனங்கள் ஓட்டும் போது செல்போன் பேசாதே... பேசுவது எமனாக இருக்கலாம்**

